[8th August 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த வேலையை முதலிலே செய்வார்கள். அதற்குப் பிறகு தான் மற்ற வேலை.

திரு. செ. மாதவன் : எளிதாகப் புரிந்துகொள்ளவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஹிந்தி சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது, அது தமிழ் மக்களுக்குப் புரிய வேண்டும். இந்தியா முழுவதும் சட்டச் சொற்கள் ஒரே மாதிரியாக அமைய வேண்டும் என்ற காரணத்தைக் காட்டி ஹிந்திச் சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்ற கருத்து சொல்லப் பட்டிருக்கிறதா ? அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இரண்டையும் ஒன்றோடொன்று 'ரிகன்ஸைல்' பண்ணலாம். 'மாமூல்' என்கிற சொல் எல்லோருக்கும் புரிகிறது. அது தமிழ்ச் சொல் இல்லை என்பதற்காக அந்தச் சொல் வேண்டாம் என்று சொல்ல முடியாது. 'மாமூல்' போன்ற, புரியக்கூடிய அகில இந்திய வார்த்தையாக இருந்தால், அதை அப்படியே வைத்துக் கொள்ளலாம். அப்படியில்லாமல், வேறு ஒரு வார்த்தை அகில இந்திய வார்த்தையாக இருந்தாலும் அது புரியாதிருந்தால், அந்த வார்த்தை வேண்டாம் என்று தான் சொல்லுவோம். அப்படித்தான் பரிசிலனை செய்துகொண்டு வருகிறோம்.

Temple Executive Officers

*202 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that in some temples, the posts of Executive Officers are vacant; and

(*b*) if so, in how many temples?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) 84 temples.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : முதல் கிரேடு கோயில்களில் நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்படுவதற்கு பி.ஏ., பி.எல்., படிப்பு வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு ரூ. 175 தான் சம்பளம் இருப்பதால், அந்தப் படிப்புப் படித்தவர்கள் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்த பிறகு, உடனே வேலையை விட்டுப் போய்விடுகிறார்கள். அதனால் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் காலியாக இருக்கின்றன. சிறிய கோயில்களைப் பொறுத்தும் அநேக தேவஸ்தானங்கள் நிர்வாக அதிகாரிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வதோடு கூட, காலியாக இருக்கும் இடங்களில் எல்லாம் நிர்வாக அதிகாரிகளை நியமிப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நிர்வாக அதிகாரிகளைப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்ந்தெடுக்கிறது. தேர்ந்தெடுத்ததற்குப் பிறகு ஒரு சிலருக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். பயிற்சி அளிக்கப்பட்டு

8th August 1966]

வருகிறது. இன்னும் வேண்டிய அளவுக்கு இந்த அதிகாரிகளைப் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மனுக் கோரித் தேர்ந்தெடுக்கும். அதெல்லாம் நடந்தால், காலி ஸ்தானங்கள் எல்லாம் பூர்த்தியாகும்.

* 203 *Q.*—Sri M. D. THIAGARAJA PILLAI: Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Executive Officer of Sri Renugadevi Amman Temple, Vijayapuram, Thanjavur district has not accounted for the temple funds to the extent of Rs. 20,000; and

(*b*) if so, the steps taken in the matter?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes. The Executive Officer has to render accounts for the temple funds to the tune of Rs. 19,300 withdrawn by him from the Banks on several dates.

(*b*) Charges have been framed against the Executive Officer and he has been placed under suspension. A complaint has been filed before the District Superintendent of Police, Thanjavur and the matter is under investigation.

பிரதம மந்திரி சுற்றுப்பயணம்

** 204 கேள்வி.—திரு. செ. மாதவன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1966-ம் ஆண்டு ஜூன்-ஜூலை மாதங்களில் இந்தியப் பிரதம மந்திரி அவர்களின் இம்மாநில சுற்றுப் பயணத்தை ஒட்டி பொதுவுடைமைக் கட்சியினர் எத்தனை பேர் கைது செய்யப் பட்டனர்?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) 861 in all were taken into custody.

(*b*) The Communist Party (rightists) directed its members and sympathisers to stage Black-flag demonstrations before the Prime Minister on 3rd July 1966 during her visits to Tiruchirappalli and Madras City. There was also information that counter demonstrations were proposed to be staged. Government apprehended in the circumstances that anti-social elements might also take advantage of the situation and indulge in disturbance and breach of the peace. The Police had, therefore, to resort to arrests, to prevent any untoward incidents at the time of the Prime Minister's visit.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் கறுப்புக் கொடி பிடிப்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், அதைத் தடுப்பது தவறு, சென்னை அரசு கைது செய்தது தவறு என்பதைப் பிரதம அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியது இந்த அரசாங் கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?